1986 நவம்பர் 24] [திரு. க. இராசாராம்]

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 69/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

திரு. எஸ். சிவராமன் : என்னைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது அவைக் குறிப்பிலே இருக்கிறது அதை.............

மாண்புமிகு திரு. க. இராசாராம் : **என்று சொன்னதையா ? அதை தயவு செய்து நீக்கிவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது நீக்கப் படுகிறது.

ஒ. பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 70/1986)@@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பெற்றது.

@@12-11-1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. சி. பொன்னையன்] [1986 நவம்பர் 24

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 70/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(முற்பகல் 11.40)

ஓ. தமிழ்ப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1986.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 71/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.:

''1986 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழக (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 71/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

**18–11–1986 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.